மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :– செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்.
2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 06 ம் நாள் வெள்ளிக்கிழமை
இ.மஎண்.09/2025
உள்
அசல் வழக்கு எண்.28/2023
--------

1) S. லதா
2) M. செல்வராணி
3) M. விஜயலட்சுமி
4) காளீஸ்வரி
5) அய்யம்மாள்
6) கருப்பசாமி
7) காளீஸ்வரி
8) S. காளியப்பன்
9) S. முருகன்
10) கற்பகவள்ளி
11) மாரியம்மாள்
12) காளியப்பன்
13) M. பிருந்தாதேவி
14) மைனர் ராஜ்குமார் .. மனுதாரர்கள்/வாதிகள்
(14 ம் மைனர் வாதிக்கு கார்டியனும், தாயாருமான 13 ம் வாதி மூலம்)

/எதிர்/

1) நீ. ஜெகதீஸ்வரன்
த/பெ. நீராத்திலிங்கம் .. 1 ம் எதிர்மனுதாரர் /1 ம் பிரதிவாதி

2) நீ. சங்கர் .. உத்தேச 2 ம் எதிர்மனுதாரர்/ உத்தேச 2 ம் பிரதிவாதி

3) N. ராஜேந்திரன் .. உத்தேச 3 ம் எதிர்மனுதாரர்/ உத்தேச 3 ம் பிரதிவாதி

இந்த மனு என் முன்பு 28.01.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. C. முத்துக்கண்ணு, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. G. பிரசன்னக்குமார், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை மனுதாரர்கள் தரப்பு மனு மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

<u>உத்தரவு</u>

இம்மனுவானது N. ராஜேந்திரன் என்பவரை அசல் வழக்கின் உத்தேச 3ம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கை மேல் நடத்த அனுமதியளித்து உத்தரவிட வேண்டி கட்டளை 1 விதி 10 (2) மற்றும் பிரிவு 151– உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்</u>:–

2.1. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் 2ம் வாதி. 1 முதல் 14 வாதிகளுக்காகவும் சேர்த்து இந்த அபிடவிட்டை தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை மற்றும் சீர்திருத்த பிராது மற்றும் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்து பிரதிவாதி கடந்த 19.09.2016ம் தேதியில் நீராத்திலிங்கம் என்பவர் நீ. சங்கர் என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட ஒரு தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஒன்று எழுதிக் கொடுத்துள்ளதாக பிரதிவாதி தரப்பில் சொல்லியுள்ளதால் மேற்படி சங்கர் அசல் வழக்கில் அவசியக் கட்சிக்காரர் ஆவார்.

2.2. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள பிராதில் மனுதாரரது பாட்டி ஆண்டாளம்மாளுக்கு 1960ம் வருட பாகப்பிரிவினை ஆவண எண்.2255/1960 பத்திரத்தின் மூலம் கிடைத்த "A" அட்டவணை சொத்தில் தபசில் நிலம் பத்திரத்தில் 6ம் பக்கம் 2 மற்றும் 7ம் பக்கத்தில் 4வது அயிட்ட சொத்தாக காட்டப்பட்டுள்ள சொத்தை ஆண்டாளம்மாளின் மகன் காளியப்பன் என்பவர் 11.03.1987ம் தேதி குருசாமி செட்டியார் மகன் நீராத்திலிங்கம் என்பவருக்கு கிரைய ஆவண எண்.544/1981ன்படி கிரையம் பதிவு செய்து கொடுத்ததாகவும், மேற்படி நீராத்திலிங்கம் 19.09.2016ம் தேதி 1ம் பிரதிவாதிக்கு கிரைய ஆவண எண்.5920/2016 படி 1960ம் வருட பாகப்பிரிவினை ஆவணத்தில் "A" அட்டவணைச் சொத்தில் 2வது அயிட்ட சொத்தை கிரையம் செய்து கொடுத்ததாகவும், அதன் தொடர்ச்சியாக 4வது அயிட்ட சொத்தை சங்கர் என்பவருக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் பதிவு செய்து கொடுத்ததாகவும், வழக்கு நிலுவையில் இருக்கும்போது கடந்த 24.01.2024ம் தேதி வழக்குச் சொத்துக்கு சிறிதும் சம்பந்தமில்லாத ராமசாமி செட்டியார் மகன் கோபால்சாமி 1) கோபால்சாமி மகன் அழகர்சாமி 2) கோபால்சாமி மகளும், சங்கர் மனைவி ஜோதி என்ற ஜோதிலட்சுமி 3) கோபால்சாமி மகளும் செல்வம் மனைவியுமான வீரலட்சுமி 4) ஆகிய நான்கு பேர்களும் சேர்ந்து சாத்தூர் டவுண் நந்தவனபட்டி தெற்குத்தெரு கதவு எண்.203ல் வசித்து வரும்

நிறைமதி மகன் என். ராஜேந்திரனுக்கு சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக கிரைய ஆவண எண்.831/2024 ன் படி கிரையம் பதிவு செய்து கொடுத்துள்ளார்கள். கடந்த 25.06.2025 ம் தேதி கணினி மூலம் சொத்து தொடர்பான வில்லங்கச்சான்று எடுத்துப் பார்த்ததில் மேற்கண்ட விபரம் தெரிய வந்துள்ளது. அசல் வழக்கில் என். ராஜேந்திரன் என்பவரை உத்தேச 3 ம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கை நடத்த உத்தரவிட வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. அவ்வாறு என். ராஜேந்திரன் என்பவரை உத்தேச 3 ம் பிரதிவாதியாக சேர்க்காமல் போனால் மனுதாரர்களுக்கு அளவு கடந்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும் நிலை உள்ளது. எனவே மனு தாக்கல்.

3) **<u>எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆட்சேபணையின் சுருக்கம்:–</u>**

3.1. மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்திருக்கும் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. இதனடியில் தெளிவுட ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர ஏனைய சங்கதிகள் யாவும் எதிர்மனுதாரரால் கடுமையாக ஆட்சேபிக்கப்படுகின்றன. அவையாவற்றையும் மனுதாரர்களே கண்டிப்பாய் ருசு செய்ய வேண்டும். கடந்த 11.03.1981 ம் தேதிய கிரையப் பத்திரத்தில் 1960 ம் தேதிய பாகப்பிரிவினை பத்திரத்தில் வரும் "A" அயிட்டச் சொத்தில் 2 மற்றும் 4 ம் அயிட்ட சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது. ஆனால் அதில் 2 வது அயிட்ட சொத்தை மட்டுமே மேற்படி பிரதிவாதி அனுபவம் செய்து வருகின்றார். மீதமுள்ள 4 ம் அயிட்ட சொத்தானது ஆண்டாளம்மாளின் வாரிசுகளாக சுந்தரம், சந்தனம் மற்றும் காளியப்பன் ஆகியோர்கள் கடந்த 04.06.1983 ல் தாயம்மாளுக்கு பதிவு செய்யப்பட்ட பத்திரம் மூலம் கிரையம் செய்து கொடுத்துள்ளார்.

3.2. பின்பு 9 வருடம் கழித்து தாயம்மாள் என்பவர் கடந்த 12.08.1992 ல் ஆண்டிச்சாமி இவர் மனைவி கருப்பம்மாள் என்ற நாகலெட்சுமிக்கு பதிவு செய்யப்பட்ட ஆவணம் மூலம் கிரையம் செய்து கொடுத்துள்ளார். இந்த கிரையம் செய்து கொடுக்கப்பட்ட இடம் காலிமனை, கருப்பம்மாள் என்ற நாகலெட்சுமி இவரது கணவர் ஆண்டிச்சாமி ஆகியோர் இந்த காலியிடத்தில் வீடு கட்டி அதில் 9 வருடம் வாசம் செய்துவிட்டு பின்பு கோபால்சாமி, சுப்புலெட்சுமி ஆகியோருக்கு கடந்த 01.07.2022 ல் பதிவு செய்யப்பட்ட பத்திரம் மூலம் கிரையம் செய்து கொடுத்துள்ளார். இந்த கோபால்சாமி மகள் ஜோதிலெட்சுமி என்ற ஜோதியை சங்கர் என்பவர் திருமணம் செய்துள்ளார்.

கோபால்சாமி, சுப்புலெட்சுமி தம்பதியர் 23 வருடம் ஆண்டனுபவித்து ராஜேந்திரன் என்பவருக்கு கடந்த 24.01.2024 ம் தேதி பதிவு செய்யப்பட்ட ஆவணம் மூலம் கிரையம் செய்து கொடுத்துள்ளார்.

3.3. மேற்படி மனுவில் மனுதாரர் ராஜேந்திரன், குருலெட்சுமி என்று குறிப்பிட்டுள்ளார். இது தவறு. ராஜேந்திரன் பெயரில் மட்டும் பதிவு நடந்துள்ளது. மேற்படி சொத்தானது கோபால்சாமி, சுப்புலெட்சுமி ஆகியோருக்கு ஜாயிண்டாக பதிவு செய்யப்பட்டிருந்தது. கடந்த 02.11.2015 ம் தேதி சுப்புலெட்சுமி இறந்துவிட்டதால் மேற்படி சொத்தை கோபால்சாமி மற்றும் அவரது வாரிசுகளான அழகர்சாமி, ஜோதி என்ற ஜோதிலெட்சுமி, வீரலெட்சுமி ஆகிய 4 பேரும் மேற்படி ராஜேந்திரனுக்கு கிரையம் செய்து கொடுத்தனர். கடந்த 24.01.2024 ம் தேதி ராஜேந்திரன் என்பவருக்கு மேற்படி 4 பேரும் கிரையம் செய்து கொடுத்துள்ளனர். ஆகவே மேற்படி பிரதிவாதியின் சகோதரர் (சங்கர்) என்பவருக்கு இந்த மனுவிற்கும் சம்பந்தம் கிடையாது. மனுதாரர் மனுவில் உண்மை சம்பவம் தெரியாமல், புரியாமல் விபரம் அறியாமல் அறிந்தவர்கள் மூலம் கேட்டு தெரிந்து கொள்ளாமல் இருந்துவிட்டு மனம்போல் மேற்படி வழக்கில் ஒவ்வொரு இடைநிலை மனுக்களை தாக்கல் செய்து கொண்டு இருக்கின்றார். தாவா சொத்தானது தற்போது ராஜேந்திரன் என்பவர் வசம் உள்ளது.

3.4. உண்மையில் இவரைத்தான் வழக்கின் வாதிகள் உத்தேச பிரதிவாதியாக சேர்த்திருக்க வேண்டும். ஆனால் சங்கர் என்பவரை வழக்கில் சேர்க்க வேண்டுமென்று மனுவில் கேட்டுள்ளது எந்த விதத்திலும் சரியல்ல. மேற்படி 1960 ம் வருட பாகப்பிரிவினை பத்திரத்தில் வரும் "A" அயிட்ட சொத்திலுள்ள 4 வதாக வரும் சொத்தானது தற்போது 24.01.2024 ம் தேதிய பத்திரப்படி ராஜேந்திரன் என்பவர்கள் வசம் உள்ளது. மேலும் சங்கர் என்பவரை முதலில் வழக்கில் தரப்பினராகச் சேர்த்தும், வழக்கு நிலுவையில் இருக்கும்போது, மேற்படி நபர் ராஜேந்திரன் என்பவருக்கு தாவா சொத்தை கிரையம் செய்திருக்கும்பட்சத்தில் அதன்பின்பே ராஜேந்திரனைத் தான் வழக்கில் சேர்க்க வேண்டுமென மனு தாக்கல் செய்திருக்க வேண்டும். ஆனால் மனுதாரர்கள்/ வாதிகள் அவ்வாறு செய்யவில்லை. உண்மை சம்பவம் மற்றும் வழக்கு விபரம் முற்றிலும் மனுதாரர் வாதிக்கு தெரியவில்லை.

3.5. மேலும் தாவா மனுவில் ராஜேந்திரன் மனைவியை வழக்கில் சேர்த்தும்

இல்லாமல், அவரது பெயரும் தவறுதலாக சேர்க்கப்பட்டுள்ளது. தாவா மனுவில் மனுதரார்கள் கேட்டிருக்கும் பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கக்கூடியதில்லை. வழக்கு ஆரம்பிக்கும் முன்பே சுமார் 3 முறை இடைநிலை மனு தாக்கல் செய்து தற்போது இ.ம.எண்.05/2025 வரை உள்ள மனுவை தாக்கல் செய்துள்ளார். குறிப்பாக மேற்படி அசல் வழக்கு தொடங்கும் முன்பு இன்னும் எத்தனை இடைநிலை மனுவை தாக்கல் செய்ய உள்ளார்களோ இல்லையா என்பது எதிர்மனுதாரர் தரப்பினருக்கு தெரியவில்லை. மேற்படி வழக்கை துரிதமாக நடத்தாமல் காலம் தாழ்த்த வேண்டுமென்ற எண்ணத்திலும், தேவையில்லாத வகையில் சுமார் 42 வருடம் கழித்து தாவா வழக்கை போட்டதுமின்றி 1981க்கு பிறகு எதிர்மனுதாரருக்கு மன உளைச்சலையும், பணச்செலவையும் ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கை காலம் தாழ்த்த வேண்டுமென்ற எண்ணத்தில் தாக்கல் செய்துள்ள மனுவை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

4) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

5) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

6) **<u>தீர்வு</u>**:-

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. ஏனென்றால் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை 5ம் பத்தியில் " தாவா சொத்தானது (4ம் அயிட்ட சொத்து ) தற்போது ராஜேந்திரன் என்பவர் வசம் உள்ளது என்றும், உண்மையில் இவரைதான் வழக்கில் வாதிகள்/மனுதாரர்கள் உத்தேச பிரதிவாதியாக சேர்த்திருக்க வேண்டும் என்று ஒப்புக் கொண்டுள்ளார். மேற்கொண்ட சங்கதிகளை பரிசீலித்துப் பார்த்ததில் எதிர்மனுதாரரே உத்தேச பிரதிவாதியாக சேர்ப்பது குறித்து ஒப்புக்கொண்டதாகவே கருதப்படுகிறது. எனவே மனுதாரரால் அசல் வழக்கில் மனுதாரர்/உத்தேச 3ம் பிரதிவாதியை சேர்த்துக்கொண்டு வழக்கினை மேல்நடத்த உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரர்களுக்கு

தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். மனுதாரர்/உத்தேச 3ம் பிரதிவாதியை இந்த வழக்கில் கட்சி சேர்க்க வேண்டியது அவசியமாகும். மேற்படி விபரம் சம்பந்தமாக நீதிமன்றத்திற்கு எடுத்துரைப்பதற்கு மனுதாரர்/உத்தேச 3ம் பிரதிவாதியை தரப்பினராக சேர்க்க வேண்டியது அவசியமாகும். மனுதாரரால் சொல்லப்பட்டுள்ள மனுதாரர்/உத்தேச 3ம் பிரதிவாதி இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினரா? இல்லையா? என்பதை இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் தீர்மானிக்க முடியாது. வழக்கு விசாரணையின்போது மட்டுமே தீர்மானிக்க முடியும். மனுதாரருக்கு மனுதாரர்/உத்தேச 3ம் பிரதிவாதியை இவ்வழக்கில் தரப்பினராக சேர்ப்பதற்கு வாய்ப்பு அளிக்காதபட்சத்தில் இவ்வழக்கில் அவசிய கட்சியினரை கட்சி சேர்க்காத தோஷத்திற்கு ஆட்படக்கூடும். மனுதாரரால் அசல் வழக்கில் மனுதாரர்/உத்தேச 3ம் பிரதிவாதியை தரப்பினராக சேர்த்து வழக்கு நடத்த உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 06ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை
எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
இ.ம.எண்.09/2025
உள்
அ.வ.எண்.28/2023
**உத்தரவு**
நாள்– 06.02.2026.